# පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
## பொலிஸ் ஊடகப் பிரிவு
## POLICE MEDIA DIVISION
14 වන මහල,සුහුරුපාය,බත්තරමුල්ල

| | | | |
|---|---|---|---|
| දිනය Date: 2026.07.13 පැය 2215 | දුරකථන අංකය Tel.NO: 011-2887973 | මගේ අංකය My NO: D/Media/Out/ 1148/2026 | විද්‍යුත් ලිපිනය E-Mails: dir.media@police.gov.lk |


**රජයේ නිළ GovPay වෙබ් අඩවියට සමාන ලෙස ව්‍යාජ වෙබ් අඩවි නිර්මාණය කර මහජනතාව මුලා කර මුදල් වංචා කිරීම සම්බන්ධව.**

ශ්‍රී ලංකාවේ රජයේ සේවාවන් වෙත ඩිජිටල් ගෙවීම් පහසුකම් සැලසීම සඳහා නිර්මාණය කරන ලද ආරක්ෂිත හා ඉතා පහසුවෙන් මාර්ග ගත ක්‍රමවේදය ඔස්සේ ක්‍රියාත්මක කිරීමට GovPay යෙදුම භාවිතා කරනු ලබයි.

රිය පදවන්නන් විසින් රථවාහන වැරදි සිදුකල අවස්ථා වලදී පොලිසියෙන් නිකුත් කරනු ලබන ස්ථානීය දඩ පත්‍රිකා වලට අදාල දඩ මුදලද මෙම ක්‍රමවේදය ඔස්සේ ගෙවීම් කිරීම සඳහා මහජනතාවට අවස්ථාව ලබා දී ඇති අතර මෙම ක්‍රමවේදයට සමාන ලෙස ව්‍යාජ වෙබ් අඩවි නිර්මාණය කර මහජනතාව මුලා කරමින් මුදල් වංචා කල අවස්ථාවන් ගණනාවක් ශ්‍රී ලංකා පොලිසිය විසින් අනාවරණය කරගෙන ඇත.

පසුගිය දින කිහිපයේදී ද මේ අන්දමින් ශ්‍රී ලංකා පොලිසිය නමින්, වේග සීමා උල්ලංඝණය කිරීම් හා එවැනි රථවාහන වැරදි සිදු කල බවට දැනුම් දී, දඩ මුදලක් ගෙවන ලෙස පවසමින් ව්‍යාජ කෙටි පණිවිඩ මහජනතාව වෙත ලැබෙමින් පවතින බවට තොරතුරු ලැබී ඇත.

මෙවැනි ව්‍යාජ පණිවිඩ ඔස්සේ මහජනතාව මුලාවට පත් කරමින් මුදල් වංචා කරනු ලබන පුද්ගලයින්ගෙන් මහජනතාව ගලවා ගැනීම සඳහා එහි නිවැරදි තත්ත්වය පැහැදිලි කරමින් මහජනතාව දැනුවත් කිරීම සඳහා රථවාහන පාලන හා මාර්ග ආරක්ෂාව දිසාව භාර නියෝජ්‍ය පොලිස්පති ඩබ්ලිව්.පී.ජේ. සේනාධිර මහතා විසින් නිකුත් කරනු ලබන හඬ පටයක් මේ සමඟ ඔබ වෙත යොමු කරමි.

ශ්‍රී ලංකා පොලිසිය රථවාහන වැරදි සම්බන්ධයෙන් කටයුතු කිරීමේදි අදාල රථවාහන වැරැද්ද සිදු කල පුද්ගලයාට අදාල ස්ථානයේදීම සිදුකල වරද සම්බන්ධයෙන් දැනුම් දීමක් සිදුකර ස්ථානීය දඩ පත්‍රිකාවක් නිකුත් කිරීම හෝ වරදට අදාලව නඩු පැවරීම සිදු කිරීම දැනට සිදුවන ක්‍රියාවලිය වේ.

ආවේක්ෂණ කැමරා උපයෝගී කරගෙන පොලිසිය විසින් යම් අවස්ථාවක රථවාහන වැරදි හඳුනාගැනීමක් සිදු කල අවස්ථාවකදී වුවද ඒ සඳහා ක්‍රියාත්මක වීමේදී කෙටි පණිවිඩ යොමු කර අදාල පුද්ගලයන්ගේ බැංකු ගිණුම් තොරතුරු ලබා ගැනීමක් කිසිසේත් සිදු නොකරන අතර මේ සම්බන්ධයෙන් මහජනතාව දැනුවත් වීම අත්‍යවශ්‍ය වේ.

මේ සම්බන්ධව අවධානය යොමු කරන ලෙසත් කිසි විටක මෙවැනි ව්‍යාජ සබැඳි හරහා සම්බන්ධ වී රැවටීම් වලට ලක්වී මුදල් වංචාවන්ට හසු නොවන ලෙස ශ්‍රී ලංකා පොලිසිය විසින් දැනුම් දෙනු ලබන අතර මෙවැනි වංචනික ක්‍රියාවකට යම් අයෙකු මේ වන විටත් භාජනය වී ඇත්නම් ඒ සම්බන්ධව අදාල පොලිස් ස්ථාන වෙත පැමිණිලි කිරීමට කටයුතු කරන ලෙස වැඩිදුරටත් දන්වා සිටී.

පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය.

## அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ GovPay இணையத்தளத்தைப் போன்று போலி இணையத்தளங்களை உருவாக்கி பொதுமக்களை ஏமாற்றி பண மோசடியில் ஈடுபடுவது தொடர்பாக

இலங்கையில் அரசாங்க சேவைகளுக்கான இலத்திரனியல் கட்டண வசதிகளை பாதுகாப்பாகவும், எளிதாகவும் வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட இணையவழி கட்டண முறைமையாக GovPay பயன்படுத்தப்பட்டு வருகிறது.

வாகன சாரதிகள் போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில், பொலிஸாரால் வழங்கப்படும் இடத்திலேயே வழங்கப்படும் அபராதப் பத்திரங்களுக்கான அபராதத் தொகையையும் இம்முறைமையின் ஊடாக செலுத்துவதற்கான வசதி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும், இந்த முறைமையை ஒத்த போலி இணையத்தளங்களை உருவாக்கி பொதுமக்களை ஏமாற்றி பண மோசடியில் ஈடுபட்ட பல சம்பவங்கள் இலங்கைப் பொலிஸாரால் கண்டறியப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களாகவும், இலங்கைப் பொலிஸ் என்ற பெயரில், வேக வரம்பை மீறியதாகவும், பிற போக்குவரத்து விதிமீறல்களை மேற்கொண்டதாகவும் தெரிவித்து, அபராதத் தொகையை செலுத்துமாறு கோரும் போலியான குறுஞ்செய்திகள் பொதுமக்களுக்கு அனுப்பப்பட்டு வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறான போலியான குறுஞ்செய்திகள் மூலம் பொதுமக்களை ஏமாற்றி பண மோசடியில் ஈடுபடுபவர்களிடமிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில், அதன் உண்மையான நிலையை விளக்கி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர அவர்களால் வெளியிடப்பட்டுள்ள குரல் பதிவு இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கைப் பொலிஸார் போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது, குறித்த விதிமீறலை மேற்கொண்ட நபருக்கு சம்பவ இடத்திலேயே அவர் செய்த குற்றம் தொடர்பாக அறிவித்து, இடத்திலேயே அபராதப் பத்திரம் வழங்கப்படுவதோ அல்லது குறித்த குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவதோ வழமையான நடைமுறையாகும்.

கண்காணிப்பு கமெராக்களின் உதவியுடன் போக்குவரத்து விதிமீறல்கள் அடையாளம் காணப்பட்டாலும், அதனைத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் போது குறுஞ்செய்திகள் அனுப்பி, சம்பந்தப்பட்ட நபர்களின் வங்கிக் கணக்கு விபரங்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பொலிஸார் கோருவதில்லை. எனவே, இது தொடர்பாக பொதுமக்கள் விழிப்புடன் இருப்பது மிகவும் அவசியமாகும்.

எனவே, இவ்விடயம் தொடர்பில் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருந்து, இவ்வாறான போலி இணைய இணைப்புகள் அல்லது குறுஞ்செய்திகள் மூலம் ஏமாற்றப்பட்டு பண மோசடிகளுக்கு இலக்காகாமல் இருக்குமாறு இலங்கைப் பொலிஸார் கேட்டுக்கொள்கின்றனர்.

மேலும், இவ்வாறான மோசடிக்கு ஏற்கனவே யாரேனும் உள்ளாகியிருந்தால், அது தொடர்பாக உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறும் இலங்கைப் பொலிஸார் அறிவுறுத்துகின்றனர்.

பொலிஸ் ஊடகப் பிரிவு

## Fake Websites Imitating the Official GovPay Platform Used to Defraud the Public

The GovPay platform has been introduced as a secure and user-friendly digital payment system designed to facilitate online payments for government services in Sri Lanka.

The system also enables members of the public to settle on-the-spot traffic fines issued by the Sri Lanka Police for traffic offences through a secure online payment method. However, the Sri Lanka Police have recently uncovered several incidents in which fraudsters have created fake websites closely resembling the official GovPay platform to deceive the public and fraudulently obtain money.

During the past few days, reports have been received indicating that members of the public have been receiving fraudulent text messages claiming to be from the Sri Lanka Police. These messages falsely allege that recipients have exceeded speed limits or committed other traffic violations and instruct them to pay fines through fraudulent links.

To raise public awareness and prevent such scams, the Police Media Division has released an audio message by the Deputy Inspector General of Police in charge of Traffic Control and Road Safety, Mr. W. P. J. Senadhira, explaining the correct procedures followed by the Sri Lanka Police and educating the public on how to identify these fraudulent attempts.

The Sri Lanka Police wish to emphasize that, when taking action against traffic offenders, the current procedure is to inform the offending driver at the scene and either issue an on-the-spot fine or initiate legal proceedings, as appropriate.

Furthermore, even where traffic violations are detected through surveillance camera systems, the Sri Lanka Police do not send text messages requesting payment, do not ask individuals to provide bank account or banking details, and do not direct members of the public to make payments through unofficial links. The public is strongly urged to remain vigilant and be aware of these official procedures.

The Sri Lanka Police advise the public not to click on suspicious links or respond to fraudulent messages and never to disclose personal or banking information in response to such communications. Anyone who has fallen victim to these fraudulent activities is requested to lodge a complaint with the nearest police station without delay.

Police Media Division